25th January 1972]

துளையிடப்பட்ட 7 துளை துவாரங்களில் (Bore holes) மூன்று துளை துவாரங்கள் உற்பத்தி கிணறுகளாக (Production wells) மாற்றப்பட்டன. இரண்டாவது கட்டத்தில் துளைக்கப்பட்ட 33 சோதனை துவாரங்களில் 19 துளைகள் உற்பத்தி குழாய்க் கிணறுகளாக மாற்றப்பட்டுள்ளன. மீதி துவாரங்கள் கைவிடப்பட்டன.

திரு. ஜி. சுவாமிநாதன் : எந்தெந்த இடங்களில் தோண்டப்பட்டவை பயன் உள்ளவையாக இருக்கின்றன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : முதல் கட்டத்தில் தோண்டப்பட்ட கிணறுகளில், மருங்குளம் 803 அடி, திருவோணம் 999 அடி, புதுப்பட்டி 779 அடி. மற்ற விவரங்கள் இல்லை.

திரு. வி. வெங்கா : வானத்தையே பார்த்துக்கொண்டிருக்கிற செங்கல்பட்டு மாவட்டத்தில் நில நீர் ஆய்வு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இது மத்திய அரசாங்கத்தால் செய்யப்படுகிறது. தமிழ் நாடு அரசாங்கத்தால் நடத்தப்படுகிற விரிவான திட்டம் டைரக்டர் ஆஃப் கிரவுண்ட் வாட்டர் டிவிஷன்-ஆல் மேற்கொள்ளப்படுகிறது.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : தஞ்சாவூர் ஜில்லாவிலே ஏராளமான குழாய்க் கிணறுகள் போடுவதற்காக பெரிய திட்டம் ஏற்பாடாகியிருக்கிறது என்று பத்திரிக்கையிலே படித்தேன். இது விஷயமாக ஏதாவது தகவல் கொடுக்க முடியுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கூட்டுறவுத் துறை அமைச்சருக்கு இது சம்பந்தமான கேள்வியைப் போட்டால், அவர்கள் விவரமாகப் பதில் சொல்வார்கள்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தஞ்சை மாவட்டத்திற்கு காவிரி நீர் வருவது தடைப்படுமோ என்ற அச்சம் இருக்கிறது. ஆகையினால் அதிகமான அளவில் நிலத்தின் அடியிலிருந்து தண்ணீர் எடுக்க அரசு முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தஞ்சை மாவட்டத்தில் நிலத்துக்கடியிலுள்ள நீரைப்பற்றி இப்போது ஸ்டேட் டைரக்டர் ஆஃப் கிரவுண்ட் வாட்டர் டிவிஷன் வேலை செய்து வருகிறது. புள்ளிவிவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. தஞ்சாவூர் மாவட்ட மக்களின் அச்சத்தைப் போக்க எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

Irrigation Schemes

* 33 Q.—Thiru V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(a) the number of irrigation schemes sanctioned by the Government as on date, in the Ramanathapuram District;

(b) the number of irrigation schemes under the examination of the Government, as on date: and

(c) the names of such schemes and the areas benefited by them?

[25th January 1972

நீர்ப் பாசனத் திட்டங்கள்.

திரு. வி. தங்கபாண்டியன் : மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் எத்தனை நீர்ப் பாசனத் திட்டங்கள் அரசாங்கத்தால் இன்றுள்ளவாறு அனுமதிக்கப் பட்டுள்ளன ?

(இ) எத்தனை நீர்ப் பாசனத் திட்டங்கள் இன்றுள்ளவாறு அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளன ?

(உ) திட்டங்களின் பெயர்களும் பயன்பெறும் பகுதிகளும் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஒவ்வொன்றும் ரூபாய் ஒரு லட்சத்திற்கும் அதிகமான மதிப் பீடுள்ள 38 நீர்பாசனத் திட்டங்களும் ஒவ்வொன்றும் ஒரு லட்சம் ரூபாய்க்குக் குறைந்த மதிப்பீடுள்ள 658 திட்டங்களும் அனுமதிக்கப்பட்டுள்ளன.

(இ) 45 நீர்பாசனத் திட்டங்கள்.

(உ) ஒவ்வொன்றும் ஒரு லட்சத்திற்கும் அதிகமான மதிப் பீட்டில் அனுமதிக்கப்பட்டுள்ளதும் பரிசீலனையில் உள்ளதுமான நீர்ப்பாசனத்திட்டங்களின் விவர அறிக்கை @ மன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொன்றும் ஒரு லட்சத்திற்குக் குறைவான திட்டங்கள் அதிகமாயிருப்பதால் அவைகளின் விவரங்கள் கொடுக்கப்படவில்லை.

திரு. வி. தங்கபாண்டியன் : தலைவரவர்களே, அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ள சில முக்கியமான திட்டங்கள் இராமநாத புரம் மாவட்டத்தின் வளர்ச்சிக்கு உதவும் என்று கருதுகிற நிலையில், அவைகளை வருகிற ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அரசு சேர்க்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஏற்கெனவே கொடுத்திருக்கிற புள்ளிவிவரப்படி, இதுவரை 6 கோடி ரூபாய்க்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் திட்டங்கள் அனுமதிக்கப்பட்டிருக் கின்றன. இப்போது 2 கோடி ரூபாய் அளவுக்கு மதிப்புள்ள திட்டங்கள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. முறையாக 'எகனமிக் ஸ்கீம்' அடிப்படையில் அனுமதிக்கும் ஏற்பாடுகள் செய்யப்படும்.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : தலைவரவர்களே, இராம நாதபுரம் மாவட்டத்தில் ஏற்கெனவே பல வருஷங்களாகச் சில திட்டங்கள் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. அத் திட்டங்கள் மூலம் எத்தனை ஏக்கர் நிலத்தில் விளைச்சல் ஏற்பட்

@ Printed as Appendix II on pages 149–15

25th January 1972]

டிருக்கிறது, எத்தனை ஏக்கர் நிலம் விளைச்சல் இல்லாமல் இன்னமும் உப்பு மண்ணாகவே இருக்கிறது? இந்த மாதிரி விஷயங்களை ஆராய்ந்து பார்த்து, நல்ல மண் வளம் உள்ள இடங்களில் இந்தத் திட்டங்களைச் செயல்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஏற்கெனவே நிறைவேற்றப்பட்ட திட்டங்களினால் ஏற்பட்ட பலனைப்பற்றிய விவரம் இல்லாவிட்டாலும்கூட, வைகைக் கால்வாய் சீரமைப்புத் திட்டம் மூலம் 1,04,102 ஏக்கர் நிலம் பயன் அடையும். அதே போல் 'பிலவுக்கால்' நீர்த் தேக்கத் திட்டத்தால் 10,358 ஏக்கர் நிலம் பயனடையும். மற்றத் திட்டங்களினாலும் ஏராளமான ஏக்கர் நிலம் பயனடைவதாக இருக்கிறது.

Primary Land Development Bank

* 34. *Q.*—THIRU R. KRISHNASWAMY NAIDU: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether the Government have passed any orders recently to stop the opening of branches in all the regions of the Taluk Primary Land Development Banks;

(*b*) if so, the reasons therefor;

(*c*) whether the Government's scheme for opening Primary Land Development Banks in the regions has been suspended; and

(*d*) the reasons therefor?

ஆரம்ப நிலவள வங்கிகள்

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு: மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தாலுகா ஆரம்ப நிலவள வங்கிகள் வட்டாரந்தோறும் கிளைகள் திறக்கப்படுவதை நிறுத்தி விடும்படி அண்மையில் அரசு ஏதேனும் உத்திரவிட்டிருக்கிறதா?

(இ) ஆமெனில் அதற்குரிய காரணங்கள் என்ன?

(உ) வட்டாரங்கள்தோறும் ஆரம்ப நிலவள வங்கிகளை நிறுவும் அரசின் திட்டம் தொடர்ந்து செயல்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறதா?

(எ) அதற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: (அ) & (உ) இல்லை.

(இ) & (எ) இவ்வினாக்களுக்கு இடமில்லை.

Registrar of Co-operative Societies

* 35 *Q.*—THIRU R. KRISHNASWAMY NAIDU: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) the number of persons who held the posts of Registrars of Co-operative Societies in the Co-operation Department in our State from 1st April 1967 to 30th June 1971; and

(*b*) the period for which each one of them held that office?